**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**O.S. NO.37/2016**

**13.07.2023 - வா.சா. 1 மகாலட்சுமி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் மாமனார் உயிருடன் இருக்கும் போது என் கணவரிடம் வாய்மொழியாக அனுபவித்து வரும்படி கூறினார். அதற்கு மேல்மாடி என் மாமனார் அனுபவித்து வந்தார். தாவா 2வது அயிட்ட சொத்தின் கதவு எண் 47 கீழ் தளம் என் கணவர் அனுபவித்து வந்தார். அதற்கான சொத்துவரியும் என் கணவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு மின் இணைப்பும் என் கணவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சொத்து வரி, மின் இணைப்பு ஆகியவைகளை கூர் சீட்டின் அடிப்படையில் நாங்கள் மாற்றிக் கொண்டோம் என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

என் கணவருக்கு 7 கடைகளை அனுபவித்து வந்தார். அதற்கான நகராட்சி வரியை என் கணவர் தான் செலுத்தி வந்தார். அதைத்தவிர முதல் மாடியில் 10 கடையும், கல்யாண மண்டபமும் உள்ளது என்றால் சரிதான். அச்சொத்து தான் தற்போது தாவா 12வது இன சொத்தாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன 10 கடைகளுக்கும், கல்யாண மண்டமும் என் மாமனார் பெயரில் தான் இன்று வரை கட்டப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் கூர் சீட்டில் என் மாமனார் பெயருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

தாவா 12வது இன சொத்து நாளது தேதி வரை நான் தான் வாடகை வாங்கி அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் 6 கடைகளுக்கு மட்டுமே வாடகை பெற்று வருகிறேன். 4 வாடகைகளும் மண்டபமும் காலியாக உள்ளது. கடைகள் மற்றும் கல்யாண மண்டபத்திற்கு கணக்கு வைத்துள்ளேன். தற்போது சாட்சி கணக்கு வழக்கு எதுவும் வைத்திருக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

தற்போதும் நான் 10 கடைகளும், கல்யாண மண்டமும் வாடகைக்கு விட்டு இருக்கிறேன் என்றும், அதற்கு கணக்கும் வைத்துள்ளேன் என்றும் தற்போது வழக்கிற்காக கணக்கு வைத்திருக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 என் மாமனார் என் கணவருக்கு உயில் எழுதி

வைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஐ என் மாமனார் 10.3.2000ல் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் முன்னிலைக்கு ரத்து செய்து விட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

என் மாமனார் இறக்கின்றவரையில் 1ம் பிரதிவாதி தான் சவரட்சணை செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் மாமியார் இறக்கின்ற 1 1/2 மாதத்திற்கு முன்பு 1ம் பிரதிவாதி அழைத்து சென்றார். என் மாமனார் இறக்கின்ற வரையில் எங்களுடன் தான் வசித்து வந்தார். 6.4.2000ல் என் மாமனார் இனம் 1 பகுதி 4 மற்றும் 5 இனங்களில் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அதனைப் பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில் முன்னிலைக்கு மேற்சொன்ன சொத்துக்களை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும், அதற்கான சொத்து வரி மற்றும் மின் இணைப்பு அவர் பெயரில் மாற்றப்பட்டு உள்ளது என்றால் என் கணவரிடம் கையெழுத்து பெற்று மாற்றிக் கொண்டார்.

அவ்வாறு கையெழுத்து எதுவும் பெறவில்லை என்றும், உயிலின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 7.9.1995 உயிலின் படி என் மாமனார் அவர் மகள் செல்விக்கு தாவா 4வது இன சொத்தின் மேற்கு பகுதியைப் உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். சுமார் 900 சதுரடி அளவில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 4வது இன சொத்தில் தெற்கு கதவு எண் 44 பி 1ம் பிரதிவாதிக்கும், அதன் வடக்கு புறம் 44 சி ராஜாவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் வாய்மொழியாக ஒதுக்கப்பட்டது.

1ம் பிரதிவாதி 1988ல் பி.எஸ்.சி. கணிதம் படித்துள்ளார் என்றால் சரிதான். அவருக்கு 1991ல் திருமணம் ஆனது. திருமணத்திற்கு பிறகு கேபில் டி.வி. லாட்ஜ், பைனான்ஸ் மேற்பார்வை செய்துவந்தார் என்றால் சரிதான். அதற்கு அவருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 6வது இன சொத்தை 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.4 முன்னிலைக்கு அவருடைய சொந்த வருமானத்தைக் கொண்டு கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் தான் வாங்கியுள்ளார். தாவா 6வது இன சொத்தை 1ம் பிரதிவாதி தான் தன் பெயரில் வரி கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அச்சொத்து வாங்கும் போது காலிமனையாக இருந்தது என்றும்,

கல்யாண மண்டபத்திற்கு சமையல் அறையாக 1ம் பிரதிவாதி கட்டினார் என்றால் சரியல்ல.

அவ்வாறு சமையல் அறை கட்டுவதற்கு 2,2,1998ல் 1ம் பிரதிவாதி திருவண்ணாமலை வீடு கட்டும் சொஸைட்டியில் பதிவு செய்யப்பட்ட அடமானக் கடன் பெயரில் ரூ. 2 1/2 லட்சம் கடன் வாங்கிய கட்டியுள்ளார் என்றால் என் மாமனார் தான் வாங்கினார். என் மாமனாருக்கும் அச்சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி கடன் பெற்று சமையல் அறை கட்டினார் என்றால் சரியல்ல. அந்த கடனை 31.5.2017ல் 1ம் பிரதிவாதி கடனை பைசல் செய்து பதிவு செய்யப்பட்ட பைசல் ரசீதை பெற்றுள்ளார் என்று சொன்னால் பொது சொத்தில் இருந்து வந்த வருவாயை கொண்டு தான் கடனை அடைத்தார்.

என் கணவர் 31.12.1999ல் திருவண்ணாமலை வீடு கட்டும் சங்கத்திற்கு 1ம் பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கக்கூடாது என்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பில் என் கணவர் 1.4.1991ல் கூர் சீட்டின் படி வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்று ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் சரியல்ல.

என் கணவர் சார்பாக வழக்கறிஞர் இன்பராஜ், திருவண்ணாமலை சார்பு நீதிமன்றத்தில் என மாமனார், மாமியார், ராஜா 1ம் பிரதிவாதி ஆகியோர் பெயரில் கேவிட் மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. அனைத்து விவரங்களும் எனக்கு நன்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே கூர் சீட்டின் அடிப்படையில் பாகம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை நாங்கள் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறோம் என்றும் தற்போது மீண்டும் பாக வழக்கு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

தாவா 7 முதல் 10 இன சொத்துக்கள் ஆதியில் 2011ல் அசோக்குமார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்னர் என் மாமனார் ராதா பெயரில் 1996ல் வாங்கப்பட்டது. 2011ல் செட்டப் பாக்ஸ் அறிமுகம் படுத்தப்பட்ட பிறகு 4 பேர் பெயரிலும் வாங்கப்பட்டது. தாவா அயிட்டம் 7 என் கணவர் பெயரிலும், அயிட்டம் 8 1ம் பிரதிவாதி பெயரிலும், அயிட்டம் 9 2ம் பிரதிவாதி சாந்தி பெயரிலும், அயிட்டம் 10 3ம் பிரதிவாதி சக்தி கணேஷ் பெயரிலும்

மாற்றப்பட்டது என்று சொன்னால் சக்தி கணேஷ் பெயரில் இல்லை. அயிட்டம் 10 யார் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் மாமியார் பெயரில் எப்போதுமே கேபிள் இணைப்பு இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

4 கேபிள் டி.விகளின் பொறுப்பு 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவராகவே பார்த்து வருகிறார். கேபிள் டி. வி அலுவலகம் ராதா பில்டிங் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. அந்த அலுவலகம் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது என்றால் தெரியாது. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- மகாலட்சுமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.